வைத்தபின்றொழுதுகையான்மலர்மழைசொரிந்துவாழ்த்தி
அத்தனேயமரர்கோவேஆதியேபரனேயோக
சித்தனேதெரியொணாதேவர்கடேவேஞான
முத்தனேயென்னையாண்டமுழுமுதற்பொருளேபோற்றி. கக

பூதமுங்கரணநான்கும்புலன்களுங்கடந்தாய்போற்றி
வேதமுந்தேடிக்காணாவிழுப்பரம்பொருளேபோற்றி
ஆதியாயந்தமாகியனாதியாம்முதல்வாபோற்றி
சோதியேசுடராயோங்குந்தொலைவிலாப்பிழம்பேபோற்றி. கஉ

விண்முதற்பூதமைந்தும்விளங்குமுக்குணமுந்தேறி
எண்முனிவோர்கள்சிந்தையிலங்கியபொருளேஞானக்
கண்மணியொளியாய்நின்றகாரணமுதலேயோகர்
உண்மகிழ்தியானத்தூடேஒளிருமெண்குணனேபோற்றி. கந

வேறு.

காலமுங்கருமமுங்கடந்தநித்தனே
சூலவெம்படையினாய்துலங்குபாற்கடன்
மேலெழுவிடத்தினைவிரும்பியுண்டருள்
நீலகண்டாநமநிமலமூர்த்தியே. கச

என்றிவன்பன்முறையிறைஞ்சியேத்தலுங்
கொன்றைமாலிகையணிகுளகன்மன்னெதிர்
நின்றிடுமன்றனைநோக்கிநின்செயல்
நன்றதாவுலகினில்நடந்ததோவென. கரு

குதலைவாய்மொழிமகார்கூறுமின்சொலை
அதிவிருப்பாகவேயாயுமன்னைபோல்
மதலைவேணியன்சொலமறலிகைதொழா
விதிர்விதிர்ப்புடனிவைவிளம்புவானரோ. கசா

வேறு.

விந்தமால்வரையினுத்தரதிசைக்கண்
விளங்கிடுங்குஞ்சரநகரின்
வந்துதோன்றினனன்மறையவர்நெறிகள்
வழுக்கியதீயதோர்பதகன்
அந்தவந்தணன்பெயரினைமொழியி
னருஞ்சுகுமாரனுமவன்செய்
சந்தமில்லதோர்பாவத்தின்றொகையினைச்
சாற்றுமாறெங்ஙனமையா. கஎ

